1989 ஏப்ரல் 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தொடர்பாக அறையில் வந்து பேசவும். விடை தரப்படும். உட்காரலாம்.

(ஊ) மத்திய அரசின் செய்தி மற்றும் தகவல் ஒலிபரப்புத் துறையினால் அனுப்பப்பெற்று உறுப்பினர்களுக்கு வழங்கப்பெற்றுள்ள வெளியீடுகளில் உள்ள ஆட்சேபகரமான கருத்துக்கள்.

திரு. இரா. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் கரங்களிலே நான் உங்களிடத்தில் ஏற்கெனவே காட்டிய Restoring Tamil Nadu to the position Leadership இந்தச் சிறிய புத்தகம் நம்முடைய Distribution Branch-இலே சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்ட ஒன்று.

(முற்பகல் 10-10)

இதைப் போல 10, 20 புத்தகங்கள் ராஜிவ் காந்தி அவர்களின் பேச்சுகளை எங்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. டெல்லியில் இருக்கிற Information and Broad Casting Ministry இதை அனுப்பியிருக்கிறது. இந்தப் புத்தகத்தில் காணப்படுகிற வாசகங்கள் மனதை மிகவும் புண்படுத்தக்கூடிய வாசகங்களாக இருக்கின்றன. ராஜிவ் காந்தி அவர்கள் தென்காசியிலும், திருநெல்வேலியிலும் காங்கிரஸ் கட்சிப் பிரச்சாரத்திற்குச் சென்றபோது பேசிய பேச்சுக்கள். முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களைப் பற்றி மிக மோசமாகப் பேசி, கோப்புகள் எல்லாம் ஆயிரக்கணக்கில் தேங்கிக் கிடந்தன, கவர்னர் ஆட்சியில்தான் இந்தக் கோப்புகளின் தேக்கம் எல்லாம் நீக்கப்பட்டன என்ற வாசகங்கள்; கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் ஏராளமாக அந்த ஆட்சியில் இருந்தார்கள். எங்களுடைய கவர்னர் ஆட்சி வந்து தான் அந்தக் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் எல்லாம் கண்டு பிடிக்கப்பட்டனர் என்பதும், அதைப்போல தேசிய முன்னணி இங்கே ஒரு ஊர்வலம் நடத்தினார்கள், அதிலே வட நாட்டிலேயிருந்து வந்த தலைவர்கள் இங்கேயிருக்கிற தலைவர்களோடு ஒன்றாக மேடையில் நின்றார்கள். இவர்கள் எப்படி தமிழைக் காப்பாற்றப் போகிறார்கள். இவர்கள் எப்படி இந்தியை எதிர்க்கப் போகிறார்கள் என்று இப்படிப்பட்ட வாசகங்கள் அடங்கிய இந்தப் புத்தகத்தை அங்கேயிருக்கிற, டெல்லியில் இருக்கிற information and Broadcasting Minisry நம்முடைய மக்களுடைய வரிப் பணத்தில் அச்சிட்டு இலட்சக் கணக்கில் வெளியிட்டு, அதைக் கொண்டு

வந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்களே, இது நியாயமா? இந்த அரசு இதை அனுமதிக்கப் போகிறதா? இப்படிப்பட்ட** எல்லாம் எதிர் காலத்திலாவது சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்காமல் இருப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சித் தொடர்பாகப் பேசப்பட்ட பேச்சுகளை அரசு சார்பாக வெளியிடுவது முறையல்லவென்பது பொதுவான மரபு. தாங்கள் கொடுத்த இந்தத் தகவலை மனதில் கொண்டு, முறைப்படி அரசுக்கு இதுபற்றி எழுதி கட்சித் தொடர்பான பேச்சுகளை எந்தக் காரணம் கொண்டும் அரசின் சார்பாக வெளியிட வேண்டாம் என்று நாங்கள் வற்புறுத்துவோம்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அவர்கள் சொல்கிற கருத்திலே விவாதத்திற்குரிய பொருள்கூட இருக்கலாம். ஆனால் ** என்று சொல்லியது இங்கே பதிவேட்டில் இருக்க வேண்டுமா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: **அகற்றி விடலாம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: தலைவர் அவர்களே, இது மத்திய அரசினுடைய பிரசுரம் ஆகும். இப்படிப்பட்ட ஆட்சேபகரமான அரசியல் பின்னணி கொண்ட கருத்துக்களை, இந்தப் பிரசுரத்தை நம்முடைய சட்டமன்றத்தில், நம்முடைய சட்டமன்றத் துறை விநியோகம் செய்திருக்கிறதே, அப்படி விநியோகம் செய்வதற்கு முன்பு அது அவர்களுடைய கவனத்திற்கு வரவில்லையா? யாருடைய அனுமதியோடு இது செய்யப்பட்டது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பொதுவாக மத்திய அரசால் வழங்கப்படுகிற எல்லா வெளியீடுகளும் அதிகாரப் பூர்வமாக முத்திரை குத்தப்பட்டே வெளியிடப்படுகின்றன. எனவே, அதை நம்முடைய செயலகம் இயல்பாகவே இங்கே வழங்குகிறது. அதிலே ஆட்சேபகரமாக இருந்தால், கட்சி சார்பிலே இருக்கிறது. என்பதற்காக முறைப்படி மத்திய அரசிற்கு எழுதி இதுபோன்ற நடவடிக்கையைத் தவிர்க்க வேண்டுமென்று நாங்கள் கண்டிப்பாக வற்புறுத்துவோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: எங்களுடைய கோரிக்கையெல்லாம் இப்படி மத்திய அரசின் சார்பாக வெளியிடப்பட்டிருந்தாலும் நம்முடைய சட்டமன்றத்தில் உறுப்பினர்களுக்கு விநியோகம் செய்கிற போது அவை என்ன கருத்துக்களைக்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

கொண்டிருக்கின்றன என்பதைப் படித்துப் பார்த்து, பிறகு உரியவர்களிடம் கலந்து தானே விநியோகம் செய்ய வேண்டும். வருவதையெல்லாம் சட்டமன்றத் துறையிலே விநியோகம் செய்வது என்று சொன்னால், நாங்கள் ஏதாவது பிரசுரத்தைக் கொடுக்கிறோம். அதை விநியோகம் செய்வதற்கு அவர்கள் தயார் தானா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ' நீங்கள் ' என்றால் தனிப்பட்ட முறையில் திரு. அப்துல் லத்தீப் அவர்களா அல்லது அரசு சார்பிலா ? அரசு சார்பில் வெளியிடுகிற கருத்து என்பதால் முதலில் சொல்லியிருக்கிறேன். இதன் தொடர்பாகச் செயலகத்திற்கு உரிய குறிப்பு வழங்கப்படும்.

திரு. எம். அப்துல் லத்தீப்: நான் கேட்பது தங்களுடைய வாயிலாக, இது முறைதானா ? முறையில்லை என்றால் என்ன நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறீர்கள் ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதன் தொடர்பாக ஏற்கெனவே விடை சொல்லியிருக்கிறேன். மத்திய அரசிற்கு எழுதி, கட்சி சார்பாக வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்வோம்.

திரு. எம். அப்துல் லத்தீப்: அப்படியானால் இப்போது விநியோகம் செய்யப்பட்டவை வாபஸ் பெறப்படுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, அச்சடித்த குறிப்புகளைத் (குறுக்கீடு) திரும்பப் பெறுவது என்பது பிரச்சினை அல்ல. செயலாளரிடம் இதுபற்றிக் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும்.

**திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, இது * * * * கோமேதகமா என்பதை நீங்கள் படித்து முடிவு எடுங்கள். அதுவரையில் எந்தவிதமான சொற்களையும் அதுபற்றிச் சொல்லி யாருடைய மனதும் புண்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென் ஆற்காடு மாவட்டம் சோணாங்குப்பத்தில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற சிலர் தாக்கப்பட்டு ஒருவர் மரணமடைந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த அலுவல், ஒத்திவைப்புத் தீர்மானம். மாண்புமிகு திரு. எஸ். டி. உகம்சந்த், '' 2–4–1989 அன்று இரவு தென்னாற்காடு மாவட்டம் சோணங்குப்பம் அருகில் பொதுக் கூட்டத்திற்குச் சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் கமான் என்பவர் தாக்கப்பட்டு சரியான சிகிச்சை அளிக்கப்படாமல் இறந்திருக்கிறார் என்றும், மேலும் சிலர் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.